**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் புதன்கிழமை**

**அ.வ.எண்.66/2024**

**[TNDG07 – 000239–2024]**

**தண்டபாணி --- வாதி**

**எதிர்**

**ஈஸ்வரி --- பிரதிவாதி**

**இந்த வழக்கானது 15.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 28.07.2025 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் K. பூபதி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக இருந்தும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்**

**தீர்ப்புரை**

**வாதிக்கு, பிரதிவாதி பிராதுப்படி ரூ.1,76,450/–ம், அசல் ரூ.1,50,000/–க்கு பிராது தேதி முதல் பின்வட்டியும் பின் செலவுத்தொகையும் சேர்த்து வாதிக்கு பிரதிவாதியைச் செலுத்திவைக்க உத்தரவிடக்கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு–**

**வாதியிடம், பிரதிவாதி கடந்த 24.09.2022 அன்று அவருடைய அவசர நிமித்தம், குடும்பச் செலவிற்காகவும், மருத்துவச் செலவிற்காகவும் பணம் ரூ.1,50,000/– ரொக்கம் பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1.00/– வீதம் வட்டி சேர்த்து வாதி வேண்டும்போது வாதிக்காவது அல்லது வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காவது ரொக்கம் செலுத்திவைப்பதாகக் கண்டு மேற்படி தேதியில் வாதியின் பெயருக்கு வாதியின் வீட்டில் வைத்து ஒரு கடனுறுதிச்சீட்டு**

எழுதிக்கொடுத்துள்ளார். தாவா கடனுறுதிச்சீட்டுக்கான அசல் மற்றும் வட்டி வகையறாவை செலுத்திவைக்கும்படி வாதி, பிரதிவாதியை பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமும் துயர்ந்து கேட்டதில் யாதொரு தொகையும் பிரதிவாதி செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வருகிறார். எனவே, பண வசூலுக்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு—**

வாதியின் வழக்கு பொய்யும் பிரட்டும் மோசடியுமானது. வாதியிடம் பிரதிவாதி தாவா பிராம்சரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்வது பொய். பிரதிவாதி வாதியிடம் எந்த ஒரு கடனும் பெற்றுக்கொள்ளவில்லை. கடன் வாங்க வேண்டிய அவசியமும் பிரதிவாதிக்கு கிடையாது. வாதி இந்த பிரதிவாதியின் கைரேகையை போர்ஜரி செய்து தாவா பிராம்சரி நோட்டினை உற்பத்தி செய்து அதனடிப்படையில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. தாவா பிராம்சரி நோட்டினை பார்வையிட்டதில் தாவா பிராம்சரி நோட்டில் உள்ள கைரேகை பிரதிவாதியின் கைரேகை அல்ல என்பதும் பிரதிவாதிக்கு தெரியவந்தது. பிரதிவாதி, வாதியிடம் கடன் பெற வேண்டிய அவசியம் கிடையாது. எனவே, வாதிக்கு இந்த பிரதிவாதி எந்தவித தொகையும் செலுத்தி வைக்க வேண்டியதில்லை. எனவே, தாவா தள்ளுபடியாகவேண்டும்.

**4. மேற்கண்ட இருதரப்பு வாதுரைகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் தீர்வு காண்பதற்காக கீழ்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டன—**

1. Whether the suit pro-note is executed by defendant for a valuable consideration?
2. Whether the plaintiff is entitled to the suit amount?
3. To what other relief plaintiff is entitled to?

5. இந்த வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. திரு. கி. வடிவேல் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் சா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ளார்.

**6. தீர்வு:–**

6.1. வழக்குரை, எதிர்வழக்குரை, வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதியிடமிருந்து, பிரதிவாதி அவரது அவசர நிமித்தம், விவசாயச் செலவிற்காக பணம் ரூ.1,50,000/–ஐ பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1/– வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடந்த 24.09.2022 அன்று கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், நாளது தேதி வரை மேற்படி கடன் தொகைக்குண்டான வட்டியோ, அசலோ வாதிக்கு, பிரதிவாதியால் செலுத்திவைக்கப்படவில்லை என்றும் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது.

6.2 பிரதிவாதி தரப்பில் வாதியிடம் எந்த ஒரு கடனும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், கடன் வாங்க வேண்டிய அவசியமும் பிரதிவாதிக்கு கிடையாது என்றும், வாதி இந்த பிரதிவாதியின் கைரேகையை போர்ஜரி செய்து தாவா பிராம்சரி நோட்டினை உற்பத்தி செய்து அதனடிப்படையில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றும் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது.

6.3. வா.சா.1/வாதி வழக்குரை சங்கதிகளையே தன் தரப்பு பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ1 கடனுறுதிச்சீட்டு பரிசீலனை செய்யப்பட்டது. கடனுறுதிச்சீட்டில் 24.09.2022 அன்று பிரதிவாதி, வாதியின் பெயருக்கு ரூ.1,50,000/–க்கு கடனுறுதிச்சீட்டை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துள்ள விபரம் தெரியவருகிறது. மேலும், வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பிராமிசரி நோட்டின் 1 வது சாட்சியான திரு.வடிவேல் என்பவர் வா.சா.1–ன் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள போதிலும், வழக்குரையை மறுக்கும்பட்சத்தில் இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியங்களை முன்னிலைப்படுத்தியோ, வாதியை குறுக்கு விசாரணை செய்தோ அவற்றை மறுத்திருக்கலாம். ஆனால் பிரதிவாதி தரப்பில் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. இந்நிலையில் வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக, வாதிக்கு, பிரதிவாதி தாவாத்தொகை ரூ.1,76,450/–ம், அசல் தொகை ரூ.1,50,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீத வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீத பின்வட்டியுடன் தாவா செலவு தொகையையும் சேர்த்து செலுத்திவைக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.08.29 19:44:37 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

**வாதி தரப்பு சாட்சி–**

| | | |
|---|---|---|
| வா.சா.1. | : | திரு. K. தண்டபாணி– (வாதி) |
| வா.சா.2 | : | திரு. வடிவேல் |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | : | 24.09.2022 ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு அசல் (வரவு இல்லை) |
| வா.சா.ஆ.2. | : | 31.01.2024ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3. | : | 07.02.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ.4 | : | 15.02.2024ம் தேதியிட்ட பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |

**சாட்சி தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1. | : | வா.சா.2னுடைய ஆதார் அடையாள அட்டை நகல்(அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –</u>**

**இல்லை**

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.08.29 19:44:44 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**